# الوظيفة النبوية

## لأوراد الصباح والمساء

# வழீபா நுபவிய்யா

## காலை, மாலை ஓதும் துஆக்களின் தொகுப்பு

தொகுப்பு:
மௌலானா மௌலவி
இஸ்மாயில் இபுனு முஹியித்தீன்

வெளியீடு:
**ஸஃது இஸ்லாமிய அறபுக் கலாபீடம்**
மர்கஸ், மாவடிப்பள்ளி,
காரைதீவு (EP), ஸ்ரீலங்கா

# உஸ்வதுன் ஹஸனஹ்

# تُحْفَةُ الْمُصْبِحِيْنَ حَامِدًا وَّمُصَلِّيًا وَّمُسَلِّمًا

## தினமும் காலை, மாலையில் ஓத வேண்டியவை

وَسَبِّحْ بِحَمْدِ رَبِّكَ بِالْعَشِيِّ وَالْاِبْكَارِ

அல்லாஹ் ﷻ திருவுளமாகிறான்:

**"காலையிலும் மாலையிலும் உமது رب (ரப்)ஐப் புகழ்ந்து துதிப்பீராக!"**

குறிப்பு: العشي (மாலை) என்பது சூரியன் சாய்ந்ததிலிருந்து அது மறையும் வரையுள்ள நேரமாகும். வல்ல الله ﷻ மேலும் திருவுளமாகிறான்:

اُذْكُرْ رَبَّكَ فِىْ نَفْسِكَ تَضَرُّعًا وَّخِيْفَةً وَّدُوْنَ الْجَهْرِ مِنَ الْقَوْلِ بِالْغُدُوِّ وَالْآصَالِ

**தனது மனதினுள்ளே பணிவாகவும், மெதுவாகவும், சப்தமான பேச்சைவிடவும் தாழ்ந்த குரலில் காலையிலும், மாலையிலும் உமது رب (ரப்)ஐ ஞாபகம் செய்வீராக!"**

குறிப்பு: இங்கு الاصال என்பது عصر (அஸரு)க்கும் مغرب (ம.்.ரிபு)க்கும் இடையிலுள்ள நேரத்தைக் குறிக்கும்.

எங்கள் அருமை நபி ரஸூலுள்ளாஹி ﷺ அவர்கள் திருவுளமானார்கள்: அல்லாஹ் ﷻ திருவுளமாகின்றான். **ஆதமுடைய மகனே! صبح (ஸுப்ஹு)த் தொழுகைக்குப் பிறகும் عصر (அஸர்) தொழுகைக்குப் பிறகும் சிறிது நேரம் என்னை ஞாபகம் செய்துகொள். அவற்றிற்கு மத்தியில் இருக்கும் நேரத்திற்கு (அதாவது முழு நாளைக்கும்) நானே (உன் தேவைகளைப் பூர்த்தி செய்து உன்**

நாட்டங்களை நிறைவேற்றி) உனக்குப் போதுமானவனாக ஆகி விடுகின்றேன். (நீ யாரிடமும் தேவைப்பட வேண்டியிருக்காது)

ابوذر (அபூதர்) ﷺ கூறுகின்றார்கள்: ரஸூலுள்ளாஹி ﷺ அவர்கள் திருவுளமானார்கள்; 'யார் صبح (ஸுப்ஹு)த் தொழுகைக்குப் பிறகு தம் இரு கால்களை மடித்தவராக யாருடனும் பேசுவதற்கு முன் பத்து முறை

لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ، لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ

என்று ஓதிக் கொள்வாரோ அவருக்குப் பத்து நன்மைகள் எழுதப்படும். பத்து பாவங்கள் அழிக்கப்படும். பத்து தரஜா (அந்தஸ்து)க்கள் உயர்த்தப்படும். அவரது அன்றைய நாள், சகல தீங்குகளை விட்டும் மிக உறுதியான பாதுகாப்பில் இருக்கும். மேலும், ஷைத்தானை விட்டும் பாதுகாக்கப்படுவார். அன்றைய தினம் இணைவைத்தலைத் தவிர எப்பாவமும் அவரை அடைய முடியாது."

முஸ்லிம் இப்னு حارث (ஹாரிஸ்) ﷺ கூறுகின்றார்கள்: மேலான ரஸூலுள்ளாஹி ﷺ அவர்கள் என்னை நோக்கி திருவுளமானார்கள்.

"நீ مغرب (மஃரிப்) தொழுகையை முடித்ததும் اَللّٰهُمَّ اَجِرْنِيْ مِنَ النَّارِ என்று ஏழு முறை சொல்வீராக! ஏனெனில் அதை நீ சொன்ன பிறகு அதே இரவில் மரணித்துவிட்டால் உமக்கு அந்நரகை விட்டும் பாதுகாப்பு ஏற்பட்டுவிடும். மேலும், صبح (ஸுப்ஹ்) தொழுததும் இவ்விதமே சொல்லிக் கொள்வீராக! ஏனெனில் அப்பகலில் மரணித்துவிட்டால் உமக்கு அந்நரகை விட்டுப் பாதுகாப்பு எழுதப்பட்டு விடும்."

علقمة (அல்கமா) இப்னுகைஸ் ﷺ கூறுகின்றார்கள்: எனக்குச் செய்தி கிடைத்துள்ளது. صبح (ஸுப்ஹ்) தொழுகைக்குப் பிறகு அறிவுள்ள மனிதன் தூங்கும்போது பூமி அள்ளாஹ்ﷻவிடம் சப்தமிட்டு அலறி முறையிடுகின்றது.

## காலையிலும், மாலையிலும் வழமையாக ஓதிவர எங்கள் அன்புநபி ﷺ அவர்கள் கற்றுத்தந்த கண்குளிர் கருத்தாழமிக்க துஆக்களின் கோர்வை

இம்மேலான துஆக்களை அன்பும், ஆர்வமும் கொண்ட உள்ளத்தோடு ஓத வேண்டும் என்பதற்காக அவற்றின் மேன்மைகளையும் சிறப்புக்களையும் தன்னகத்தே பொதிந்த அன்புநபி ﷺ அவர்களின் பொன்மொழிகளுடன் அழகிய دعاء (துஆ)க்களை ஒன்றுசேர்த்துள்ளோம். வலதுபுறமிருக்கும் அறபி இலக்க வரிசைப்படி دعاء (துஆ)க்களை ஓதவும்.

01. காலையில் ஓதும்போது முதலில் ஒருமுறை يس شريف (யாஸீன் ஷரீபை) ஓதிக்கொள்ள வேண்டும்.

عطاء (அதா.) இப்னு அபீ பர்ராஹ் ؓ கூறுகின்றார்கள்: "எனக்கு அன்பான நபி ﷺ அவர்களின் இப்பொன்மொழி எத்தியுள்ளது. அதாவது யார் பகலின் ஆரம்பத்தில் يس شريف (யாஸீன் ஷரீபை) ஓதுவாரோ அவரது எல்லாத் தேவைகளும் பூர்த்தி செய்து கொடுக்கப்படும்."

(ஒருமுறை காலையில்) يس شريف

02. முஹம்மதுப்னு نضر (நழ்ர்) ؓ கூறுகின்றார்கள்: "ஆதம் ؑ அவர்கள் அள்ளாஹ் ﷻ வை நோக்கி எனது ரப்பே! நீ என்னை உழைப்பில் (விவசாயத்தில்) ஈடுபடுத்திவிட்டாய்! உனது திருப்புகழும் தூய்மையும் அடங்கிய ஒரு பூரண دعاء (துஆ)வை எனக்குக் கற்றுத் தந்தருள் என வேண்டிக் கொண்டார்கள். அள்ளாஹ் ﷻ வஹீ அனுப்பினான். ஆதமே! நீர் காலையில் மூன்று முறையும் மாலையில் மூன்று முறையும் பின்வருமாறு ஓதுவீராக!"

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ حَمْدًا يُوَافِيْ نِعَمَهُ وَيُكَافِئُ مَزِيْدَهُ

*(3 முறை)*

இது எனது புகழையும் துதியையும் ஒருங்கே பொதிந்ததாகும்."

03. ابـو الـدرداء (அபூ தர்தா) رضي الله عنه கூறுகிறார்கள்: மேலான ரஸூலுள்ளாஹி ﷺ அவர்கள் திருவுளமானார்கள்: ''யார் காலையில் பத்து முறையும் மாலையில் பத்து முறையும் என்மீது ஸலவாத் சொல்கிறாரோ قـيـامـة (கியாமத் உடைய) நாளில் எனது சந்திப்பு அவருக்குக் கிடைக்கும்.

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدِنِ النَّبِيِّ الْأُمِّيِّ وَعَلٰى اٰلِهٖ وَصَحْبِهٖ وَسَلِّمْ

04. அள்ளாஹ் ﷻ திருவுளமாகிறான்: அள்ளாஹ்ﷻவுக்கு அழகிய திருநாமங்கள் உள்ளன. அவற்றைக் கொண்டு அவனை அழையுங்கள். மேலான நபி ﷺ திருவுளமானார்கள்: ''அள்ளாஹ்ﷻவுக்கு தொன்னூற்றொன்பது திருநாமங்கள் உள்ளன. எனவே, அவற்றை எவர்கள் (ஓதி வருகிறார்களோ) பாடமிடுகிறார்களோ (பாதுகாக்கிறார்களோ), அவர்கள் சொர்க்கம் நுழைவார்கள்."

اَسْئَلُكَ رَبِّيَ اللّٰهَ الَّذِيْ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ الرَّحْمٰنَ الرَّحِيْمَ الْمَلِكَ الْقُدُّوْسَ السَّلَامَ الْمُؤْمِنَ الْمُهَيْمِنَ الْعَزِيْزَ الْجَبَّارَ الْمُتَكَبِّرَ الْخَالِقَ الْبَارِئَ الْمُصَوِّرَ الْغَفَّارَ الْقَهَّارَ الْوَهَّابَ الرَّزَّاقَ الْفَتَّاحَ الْعَلِيْمَ الْقَابِضَ الْبَاسِطَ الْخَافِضَ الرَّافِعَ الْمُعِزَّ الْمُذِلَّ السَّمِيْعَ الْبَصِيْرَ الْحَكَمَ الْعَدْلَ اللَّطِيْفَ الْخَبِيْرَ الْحَلِيْمَ الْعَظِيْمَ الْغَفُوْرَ الشَّكُوْرَ الْعَلِيَّ الْكَبِيْرَ الْحَفِيْظَ الْمُقِيْتَ الْحَسِيْبَ الْجَلِيْلَ الْكَرِيْمَ الرَّقِيْبَ الْمُجِيْبَ الْوَاسِعَ الْحَكِيْمَ الْوَدُوْدَ الْمَجِيْدَ الْبَاعِثَ الشَّهِيْدَ الْحَقَّ الْوَكِيْلَ الْقَوِيَّ الْمَتِيْنَ الْوَلِيَّ الْحَمِيْدَ الْمُحْصِيَ

الْمُبْدِئُ الْمُعِيْدُ الْمُحْيِ الْمُمِيْتُ الْحَيُّ الْقَيُّوْمُ الْوَاجِدُ الْمَاجِدُ

الْوَاحِدُ الْاَحَدُ الصَّمَدُ الْقَادِرُ الْمُقْتَدِرُ الْمُقَدِّمُ الْمُؤَخِّرُ الْاَوَّلُ

الْآخِرُ الظَّاهِرُ الْبَاطِنُ الْوَالِى الْمُتَعَالِى الْبَرُّ التَّوَّابُ الْمُنْعِمُ

الْمُنْتَقِمُ الْعَفُوُّ الرَّؤُوْفُ مَالِكُ الْمُلْكِ ذُالْجَلَالِ وَالْاِكْرَامِ

الْمُقْسِطُ الْجَامِعُ الْغَنِيُّ الْمُغْنِى الْمُعْطِى الْمَانِعُ الضَّارُّ النَّافِعُ

النُّوْرُ الْهَادِى الْبَدِيْعُ الْبَاقِى الْوَارِثُ الرَّشِيْدُ الصَّبُّوْرُ

05. ابوالدرداء (அபூதர்தா) ﵁ கூறுகிறார்கள்: நபி ﷺ அவர்கள் திருவுளமானார்கள்; "யார் காலையிலும், மாலையிலும்

حَسْبِيَ اللهُ لَا إِلٰهَ إِلَّا هُوَ عَلَيْهِ تَوَكَّلْتُ وَهُوَ رَبُّ الْعَرْشِ الْعَظِيْمِ

*(7 முறை)*

என்று ஏழு முறை ஓதி வருகிறாரோ அள்ளாஹ் அவரைக் கவலையில் ஆழ்த்தும் துன்யா, ஆகிராவின் சகல காரியங்(தேவை)களுக்கும் போதுமானவனாகி விடுகிறான்."

06. இப்ராஹிம் ﵁ கூறுகிறார்கள்: நபி முஹம்மது ரஸுலுல்லாஹ் ﷺ அவர்கள் ஒரு பட்டாளத்தில் எங்களை அனுப்பி வைத்தார்கள். காலையிலும், மாலையிலும்

اَفَحَسِبْتُمْ اَنَّمَا خَلَقْنَاكُمْ عَبَثًا وَاَنَّكُمْ اِلَيْنَا لَاتُرْجَعُوْنَ *

فَتَعَالَى اللهُ الْمَلِكُ الْحَقُّ لَا اِلٰهَ اِلَّا هُوَ رَبُّ الْعَرْشِ الْكَرِيْمِ *

وَمَنْ يَدْعُ مَعَ اللهِ اِلٰهًا آخَرَ لَا بُرْهَانَ لَهُ بِهِ فَاِنَّمَا حِسَابُهُ عِنْدَ

رَبِّهِ اِنَّهُ لَايُفْلِحُ الْكَافِرُوْنَ وَقُلْ رَّبِّ اغْفِرْ وَارْحَمْ وَاَنْتَ خَيْرُ

الرَّاحِمِيْنَ*

என்று ஓதிக்கொள்ளுமாறு பணித்தார்கள். ஆக அதை நாம் ஓதி வந்தோம். எனவே வெற்றி பெற்று (கனிமத்) பொருட்களை அடைந்து பாதுகாப்பாகத் திரும்பினோம்.

07. இப்னு அப்பாஸ் ﷺ கூறுகின்றார்கள்: நபி முஹம்மது ரஸுலுள்ளாஹி ﷺ அவர்கள் திருவுளமானார்கள்; "யார் காலையில்

فَسُبْحَانَ اللهِ حِيْنَ تُمْسُوْنَ وَحِيْنَ تُصْبِحُوْنَ* وَلَهُ الْحَمْدُ فِى السَّمٰوَاتِ وَالْاَرْضِ وَعَشِيًّا وَحِيْنَ تُظْهِرُوْنَ* يُخْرِجُ الْحَيَّ مِنَ الْمَيِّتِ وَيُخْرِجُ الْمَيِّتَ مِنَ الْحَيِّ وَيُحْيِى الْاَرْضَ بَعْدَ مَوْتِهَا وَكَذٰلِكَ تُخْرَجُوْنَ*

என்று ஓதுவாரோ அவருக்கு அன்றைய பகலின் தவறிப்போன (வழமையாக ஓதிவரும் ஓதல்கள், நபில் ஆன) அமல்கள் போன்றவற்றின் நற்கூலியை அவர் அடைந்து கொள்வார்."

08. ابوهريرة (அபூஹுரைரா) ﷺ கூறுகிறார்கள்: நபி முஹம்மது ரஸுலுள்ளாஹி ﷺ அவர்கள் திருவுளமானார்கள்; "யார் இவற்றை காலையானதும் المومن (சூரா மு:மின்) இன் ஆரம்ப ஆயத்துக்களை اليه المصير வரை ஓதிவிட்டு ஆயத்துல் குர்ஸியையும் ஓதுவாரோ அவ்விரண்டின் பரகத்தால் மாலை வரை அவர் பாதுகாக்கப்படுவார். யார் இவற்றை மாலையானதும் ஓதுவாரோ அவ்விரண்டின் பரக்கத்தால் காலை வரை அவர் பாதுகாக்கப்படுவார்."

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ* حم * تَنْزِيْلُ الْكِتَابِ مِنَ اللهِ الْعَزِيْزِ الْعَلِيْمِ * غَافِرِ الذَّنْبِ وَقَابِلِ التَّوْبِ شَدِيْدِ الْعِقَابِ ذِى الطَّوْلِ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ اِلَيْهِ الْمَصِيْرُ* اَللهُ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ الْحَيُّ الْقَيُّوْمُ

لَاتَأْخُذُهُ سِنَةٌ وَّلَا نَوْمٌ لَهُ مَافِي السَّموَاتِ وَمَا فِي الْاَرْضِ مَنْ
ذَاالَّذِيْ يَشْفَعُ عِنْدَه الَّا بِاِذْنِه يَعْلَمُ مَابَيْنَ اَيْدِيهِمْ وَمَاخَلْفَهُمْ
وَلَايُحِيطُوْنَ بِشَيْءٍ مِّنْ عِلْمِه الَّا بِمَا شَآءَ وَسِعَ كُرْسِيُّهُ
السَّموَاتِ وَالْاَرْضَ وَلَايَؤُدُهُ حِفْظُهُمَا وَهُوَ الْعَلِيُّ الْعَظِيْمُ *

09. معقل (ம:.கல்) இப்னு யஸார் ﷺ அவர்கள் நபி முஹம்மது ரஸுலுள்ளாஹி ﷺ அவர்கள் திருவுளமானதாகக் கூறுகிறார்: ‘‘யார் காலையானதும் மூன்று முறை

أَعُوْذُ بِاللهِ السَّمِيْعِ الْعَلِيْمِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ (மூன்று முறை

என்று ஓதிக் கொண்டு சூரத்துல் ஹஷ்ர் الحشر கடைசி மூன்று ஆயத்துக்களையும் ஓதிக் கொள்வாரோ அள்ளாஹ் ﷻ அன்று மாலை வரை அவருக்காக துஆச் செய்ய எழுபதினாயிரம் மலக்குகளைப் பொறுப்பாளிகளாக ஆக்கிவிடுகின்றான். அன்றைய பகலில் அவர் மரணமானால் شهيد ஆக - சன்மார்க்கத்திற்கு இன்னுயிரை அர்ப்பணித்த உத்தம தியாகிகளின் அந்தஸ்த்தில் - மரணமானவர் போலாவார்.

யார் இதனை மாலையானதும் ஓதுவாரோ அவரும் இதே அந்தஸ்த்துக்கும் - சிறப்புக்கும் - உரியவராகி விடுவார்.”

هُوَ اللهُ الَّذِيْ لَاۤاِلٰهَ اِلَّاهُوَ عَالِمُ الْغَيْبِ وَالشَّهَادَةِ هُوَ الرَّحْمٰنُ
الرَّحِيْمُ * هُوَ اللهُ الَّذِيْ لَاۤاِلٰهَ اِلَّاهُوَ الْمَلِكُ الْقُدُّوْسُ السَّلَامُ
الْمُؤْمِنُ الْمُهَيْمِنُ الْعَزِيْزُ الْجَبَّارُ الْمُتَكَبِّرُ سُبْحَانَ اللهِ عَمَّا

يُشْرِكُوْنَ * هُوَ اللّٰهُ الْخَالِقُ الْبَارِئُ الْمُصَوِّرُ لَهُ الْاَسْمَآءُ الْحُسْنٰى يُسَبِّحُ لَهُ مَافِى السَّمٰوَاتِ وَالْاَرْضِ وَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ*

10. அப்துள்ளாஹ் இப்னு (குபைய்) خبيب ﷺ கூறுகிறார்கள்: ''கடுமையான மழையும் இருளும் சூழ்ந்த ஓர் இரவில் நாம் அன்பான நபி முஹம்மது ரஸுலுள்ளாஹி ﷺ அவர்களை, எங்களை அவர்கள் தொழுவிக்க வேண்டும் என்பதற்காகத் தேடிப் புறப்பட்டோம். நான் அவர்களைச் சென்றடைந்ததும், 'சொல்வீராக!' என்றனர். நான் ஒன்றும் சொல்லவில்லை. பிறகு ''சொல்வீராக!' என்றனர். அதற்கு நான் ''அள்ளாஹ்வின் உண்மைத் தூதரே! நான் என்ன சொல்லட்டும்?" என வினவினேன். அதற்கு மேலான நபி முஹம்மது ரஸுலுள்ளாஹி ﷺ அவர்கள் திருவுளமானார்கள்:

قُلْ هُوَاللّٰهُ اَحَدٌ ، قُلْ اَعُوْذُ بِرَبِّ الْفَلَقِ ، قُلْ اَعُوْذُ بِرَبِّ النَّاسِ

ஆகியவற்றை நீர் காலையிலும், மாலையிலும் மூன்று மூன்று முறை ஓதுவீராக! அவை உமக்கு எல்லா வகையிலும் போதுமானதாக ஆகிவிடும். (தேவைகள் பூர்த்தியாகும் விடயத்திலோ அல்லது ஆபத்துகள், பலாய், முஸீபத்துகள் ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கப்படும் விடயத்திலோ நீர் வேறு எதன் பக்கமும் தேவையுள்ளவராக ஆக மாட்டீர்".)

(காலை 3 முறை, மாலை 3(முறை)

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ* قُلْ هُوَاللّٰهُ اَحَدٌ * اَللّٰهُ الصَّمَدُ * لَمْ يَلِدْ وَلَمْ يُوْلَدْ * وَلَمْ يَكُنْ لَّهُ كُفُوًا اَحَدٌ*

(காலை 3 முறை, மாலை 3(முறை)

بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيْمِ * قُلْ اَعُوْذُ بِرَبِّ الْفَلَقِ * مِنْ شَرِّ مَاخَلَقَ * وَمِنْ شَرِّ غَاسِقٍ اِذَاوَقَبَ * وَمِنْ شَرِّ النَّفّٰثٰتِ فِى الْعُقَدِ * وَمِنْ شَرِّ حَاسِدٍ اِذَاحَسَدَ *

(காலை 3 முறை, மாலை 3(முறை)

بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيْمِ * قُلْ اَعُوْذُ بِرَبِّ النَّاسِ * مَلِكِ النَّاسِ * اِلٰهِ النَّاسِ * مِنْ شَرِّ الْوَسْوَاسِ * الْخَنَّاسِ الَّذِيْ يُوَسْوِسُ فِى صُدُوْرِ النَّاسِ * مِنَ الْجِنَّةِ وَالنَّاسِ *

11. حسن (ஹஸன்) ﷺ கூறுகிறார்கள்: ''ஸமுரா இப்னு ஜுன்துப் ﷺ என்னை நோக்கி, 'உங்களுக்கு நான் நபி முஹம்மது ரஸுலுள்ளாஹி ﷺ அவர்களிடமிருந்தும் அபூபக்கர் ﷺ, உமர் ﷺ அவர்களிடமிருந்தும் பன்முறை கேட்ட ஒரு ஹதீஸைச் சொல்ல வேண்டாமா?' எனக் கேட்டார்கள். அதற்கு நான் 'ஏன் இல்லை. அவசியம் சொல்லுங்கள்' என்றேன். அதற்கு அவர்கள் சொன்னார்கள்; 'யார் காலை, மாலையில்

(காலை 7 முறை, மாலை 7 முறை)

اَللّٰهُمَّ اَنْتَ خَلَقْتَنِيْ وَاَنْتَ تَهْدِيْنِيْ وَاَنْتَ تُطْعِمُنِيْ وَاَنْتَ تَسْقِيْنِيْ وَاَنْتَ تُمِيْتُنِيْ وَاَنْتَ تُحْيِيْنِيْ

சொன்னாரோ, அவர் எதைக் கேட்டாலும் அள்ளாஹ் நிச்சயமாக அவருக்கு அளிப்பான்". இந்த ரிவாயத்தின் இறுதியில் மூஸா ﷺ அவர்களுக்கு அள்ளாஹ் ﷻ இந்த (துஆ)வைக் கற்றுக் கொடுத்ததாகவும், அவர்கள் தினமும்

ஏழுமுறை இதை ஓதி வந்ததாகவும், அவர்கள் அள்ளாஹ் ﷻ விடம் எதைக் கேட்டாலும் அள்ளாஹ் ﷻ அவர்களுக்கு அதை அளித்து வந்ததாகவும் வந்துள்ளது.

12. زبير بن عوام (சுபைர் இப்னு அவ்வாம்) ؓ அவர்கள் கூறுகிறார்கள்: கண்மணி நபி முஹம்மது ரஸுலுல்ளாஹி ﷺ அவர்கள் திருவுளமானார்கள்; ''அடியார்கள் காலை நேரத்தை அடைந்ததும் தினமும் தவறாது ஒரு அழைப்பாளர் சப்தமிட்டுக் கூறுகிறார். காலை, மாலை

سُبْحَانَ الْمَلِكِ الْقُدُّوْسِ

மற்றொரு ரிவாயத்தில் ஒரு சப்தமிடுபவர் கூவி அழைத்துக் கூறுகிறார். ''படைப்பினங்களே! பரிசுத்தமான அள்ளாஹ்வைத் துதி செய்யுங்கள்!"

13. அனஸ் ؓ அவர்கள் கூறுகிறார்கள்: நபி முஹம்மது ரஸுலுள்ளாஹி ﷺ அவர்கள் தமது அருமை மகளார் பாத்திமா அவர்களைப் பார்த்துக் கூறினார்கள்; 'நான் உங்களுக்குச் செய்யும் உபதேசத்தைக் கேளாதிருக்க உங்களுக்கு என்ன தடை இருக்கிறது. (தடை ஒன்றும் இல்லை) எனவே, காது தாழ்த்திக் கேட்பீராக! காலையானதும், மாலையானதும்

يَا حَيُّ يَا قَيُّوْمُ بِرَحْمَتِكَ أَسْتَغِيْثُ فَاَصْلِحْ لِيْ شَانِيْ كُلَّهُ وَلَا تَكِلْنِيْ إِلٰى نَفْسِيْ طَرْفَةَ عَيْنٍ ( النسائى).

என்று கூறுவீராக!"

14. யார் ஒரு நாளைக்கு இருபத்தேழு அல்லது இருபத்தி ஐந்து முறை மு.்.மினான ஆண், பெண்களின் பிழை பொறுப்பதற்காக துஆ செய்தால் அவர் அள்ளாஹ் ﷻ விடத்தில் பூமியில் உள்ளவர்களுக்கு எந்த مستجاب الدعوات (துஆ ஒப்புக் கொள்ளப்படக்கூடிய) நன் மக்களின் பொருட்டால் رزق (ரிஸ்க்) கொடுக்கப்படுகிறதோ அவர்களில் சேர்த்துக் கொள்ளப்படுவார்

اَللّٰهُمَّ اغْفِرْ لِيْ وَلِلْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ وَالْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ

(27 முறை)

15. شداد (ஷத்தாத் இப்னு அவ்ஸ்) ﷺ கூறுகிறார்கள்: நபி முஹம்மது ரஸுலுள்ளாஹி ﷺ அவர்கள் திருவுளமானார்கள்: ''காலையிலும், மாலையிலும்

اَللّٰهُمَّ أَنْتَ رَبِّي لَا إِلٰهَ إِلَّا أَنْتَ خَلَقْتَنِيْ وَأَنَا عَبْدُكَ، وَأَنَا عَلَى عَهْدِكَ وَوَعْدِكَ مَا اسْتَطَعْتُ، أَعُوْذُ بِكَ مِنْ شَرِّ مَا صَنَعْتُ، أَبُوْءُ لَكَ بِنِعْمَتِكَ عَلَيَّ، وَأَبُوْءُ بِذَنْبِي، فَاغْفِرْ لِي فَإِنَّهُ لَا يَغْفِرُ الذُّنُوْبَ إِلَّا أَنْتَ

இதை மாலையில் ஓதிய பிறகு மரணமானால் சொர்க்கம் நுழைவான். காலையானதும் ஓதி அன்று பகல் மரணமானால் சொர்க்கம் நுழைவான்."

16. அப்துள்ளாஹ் இப்னு அப்பாஸ் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: ''ஒரு மனிதர் நபி முஹம்மது ரஸுலுள்ளாஹி ﷺ அவர்களிடம் வந்து எனக்குப் பலவிதமான துன்பங்களும், கஷ்டங்களும் நேரிடுகின்றன என முறையிட்டுக் கொண்டார். அதற்கு நபி முஹம்மது ரஸுலுள்ளாஹி ﷺ அவர்கள் ''நீர் காலையிலும், மாலையிலும்

بِسْمِ اللّٰهِ عَلَى نَفْسِيْ وَأَهْلِيْ وَمَالِيْ

என்று ஓதி வருவீராக! உமக்கு எந்த நஷ்டமும் ஏற்படாது." ஆக, அம்மனிதர் அப்புனித வார்த்தைகளைக் கூறிவந்தார். கஷ்ட, துன்பங்கள் அவரை விட்டும் நீங்கிவிட்டன.

17. மேலும், நபி முஹம்மது ரஸுலுள்ளாஹி ﷺ அவர்கள் திருவுளமானார்கள்: ''எந்த அடியான் ஒவ்வொரு பகலின் காலையிலும், ஒவ்வொரு இரவின் மாலையிலும்

3 முறை

بِسْمِ اللهِ الَّذِي لَا يَضُرُّ مَعَ اسْمِهِ شَيْءٌ فِي الْأَرْضِ وَلَا فِي السَّمَاءِ وَهُوَ السَّمِيعُ الْعَلِيمُ

என்று ஓதி வந்தால் அவனுக்கு எந்த வஸ்துவும் தீங்கிழைக்காது". மற்றுமொரு ரிவாயத்தில் அவனுக்கு உறுதியான எந்த ஆபத்தும் ஏற்படாது.

18. அனஸ் ﷺ கூறுகிறார்கள்: மேலான நபி முஹம்மது ரஸுலுள்ளாஹி ﷺ அவர்கள் ஸஹாபாக்களை நோக்கி, ''உங்களில் ஒருவர் ابوضمضم (அபூழம்ழம்)ஐப் போல ஆகிவிட முடியுமா? என வினவினார்கள். அதற்கவர்கள் ''அள்ளாஹ்வுடைய அன்புத் தூதரே! ابوضمضم (அபூழம்ழம்) யார்?" என விசாரித்தனர். அதற்கு நபி முஹம்மது ரஸுலுள்ளாஹி ﷺ அவர்கள் திருவுளமானார்கள்: ''அவர்கள் காலையானதும்

اَللّٰهُمَّ اِنِّي قَدْ وَهَبْتُ نَفْسِي وَعِرْضِي لَكَ

(கருத்து: யா அள்ளாஹ்! என்னையும் எனது மானம், மரியாதைகளையும் உனக்கே அன்பளிப்பாகத் தந்துவிட்டேன்) எனக் கூறிவிடுவார். பிறகு அவர் தனக்கு ஏசுபவனுக்கு ஏசவும் மாட்டார்; அநியாயம் செய்பவனுக்கு (பதிலாக) அநியாயம் செய்யவும் மாட்டார். அடித்தவனுக்கு அடிக்கவும் மாட்டார்.'

19. அன்பான நபி முஹம்மது ரஸுலுள்ளாஹி ﷺ அவர்கள் திருவுளமானார்கள்: ''யார் காலையில்

اَللّٰهُمَّ مَا أَصْبَحَ بِي مِنْ نِعْمَةٍ أَوْ بِأَحَدٍ مِنْ خَلْقِكَ فَمِنْكَ وَحْدَكَ لَا شَرِيكَ لَكَ فَلَكَ الْحَمْدُ وَلَكَ الشُّكْرُ

எனக் கூறுவாரோ அவர் அன்றைய பகலின் (அருட்கொடைகளுக்கான) நன்றிக் கடனை நிறைவேற்றியவர்

ஆவார். யார் இதுபோன்று மாலையில்

اَللّٰهُمَّ مَا أَمْسٰى بِي مِنْ نِعْمَةٍ أَوْ بِأَحَدٍ مِنْ خَلْقِكَ فَمِنْكَ

وَحْدَكَ لَا شَرِيْكَ لَكَ فَلَكَ الْحَمْدُ وَلَكَ الشُّكْرُ

என்று கூறுவாரோ அவர் அன்றைய இரவின் (அருட்கொடைகளுக்கான) நன்றிக் கடனை நிறைவேற்றியவர் ஆவார்."

20. அபூபக்ர் ﷺ அவர்கள் அண்ணல் நபி முஹம்மது ரஸுலுல்ளாஹி ﷺ அவர்களை நோக்கி, ''யா ரஸுலுல்ளாஹ்! நான் காலையிலும், மாலையிலும் ஓதிவர எனக்குச் சில வார்த்தைகளைக் கற்றுத் தாருங்கள்" என்றார்கள். அதற்கு அவர்கள் திருவாய் தலர்ந்தருளினார்கள்: ''சொல்வீராக!

اَللّٰهُمَّ فَاطِرَ السَّمٰوَاتِ وَالْأَرْضِ عَالِمَ الْغَيْبِ وَالشَّهَادَةِ رَبَّ

كُلِّ شَيْءٍ وَمَلِيْكَهُ أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا أَنْتَ أَعُوْذُ بِكَ مِنْ شَرِّ

نَفْسِيْ وَشَرِّ الشَّيْطَانِ وَشِرْكِهِ

இதைக் காலையிலும், மாலையிலும், படுக்கைக்குச் செல்லும்போதும் ஓதிக் கொள்வீராக!" என்றனர்.

21. ابوهريرة (அபூஹுரைரா) ﷺ கூறுகிறார்: அண்ணல் நபி முஹம்மது ரஸுலுல்ளாஹி ﷺ அவர்கள் காலையானதும்

اَللّٰهُمَّ بِكَ أَصْبَحْنَا وَبِكَ أَمْسَيْنَا وَبِكَ نَحْيَا وَبِكَ نَمُوْتُ

وَإِلَيْكَ الْمَصِيْرُ

என்றும்

மாலையானதும்

اَللّٰهُمَّ بِكَ أَمْسَيْنَا وَبِكَ أَصْبَحْنَا وَبِكَ نَحْيَا وَبِكَ نَمُوْتُ وَإِلَيْكَ النُّشُوْرُ

என்றும் ஓதுவார்கள்.

22. அப்துர்ரஹ்மான் இப்னு அபீபக்ரஹ் ﷺ அவர்கள் தமது தகப்பனாரை நோக்கி ''தந்தையே! நீங்கள் காலையிலும், மாலையிலும் மூன்று முறை

اَللّٰهُمَّ عَافِنِيْ فِيْ بَدَنِيْ ط اَللّٰهُمَّ عَافِنِيْ فِيْ سَمْعِيْ ط اَللّٰهُمَّ عَافِنِيْ فِيْ بَصَرِيْ ط اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنَ الْكُفْرِ وَالْفَقْرِ ط اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنْ عَذَابِ الْقَبْرِ لَا إِلٰهَ إِلَّا أَنْتَ.

என்ற துஆவை ஓதக் கேட்கிறேன்" என்றனர். அதற்கவர்கள், ''(மகனே!) நான் இந்த துஆவை கண்மணி முஹம்மது ரஸுலுள்ளாஹி ﷺ அவர்கள் ஓத செவியுற்றுள்ளேன். எனவே, அவர்களது சுன்னத்தை எடுத்து நடக்க ஆசைப்படுகிறேன்" என்றார்கள்.

23. கண்மணி நபி முஹம்மது ரஸுலுள்ளாஹி ﷺ அவர்கள் காலை நேரமானதும்

أَصْبَحْنَا عَلَى فِطْرَةِ الْإِسْلَامِ وَكَلِمَةِ الْإِخْلَاصِ وَعَلَى دِيْنِ نَبِيِّنَا مُحَمَّدٍ ﷺ وَعَلَى مِلَّةِ أَبِيْنَا إِبْرَاهِيْمَ حَنِيْفًا مُسْلِمًا وَمَا كَانَ مِنَ الْمُشْرِكِيْنَ

என்றும்

மாலையானதும்

أَمْسَيْنَا عَلَى فِطْرَةِ الْإِسْلَامِ وَكَلِمَةِ الْإِخْلَاصِ

وَعَلَى دِيْنِ نَبِيِّنَا مُحَمَّدٍ ﷺ وَعَلَى مِلَّةِ أَبِيْنَا إِبْرَاهِيْمَ حَنِيْفًا

مُسْلِمًا وَمَاكَانَ مِنَ الْمُشْرِكِيْنَ

என்றும் கூறுவார்கள்.

24. கண்மணி நபி முஹம்மது ரஸூலுள்ளாஹி ﷺ அவர்கள் திருவுளமானார்கள்: ''உங்களில் ஒருவர் காலை நேரத்தை அடைந்தால் -

أَصْبَحْنَا وَأَصْبَحَ الْمُلْكُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ اَللّٰهُمَّ إِنِّي أَسْأَلُكَ

خَيْرَ هٰذَا الْيَوْمِ فَتْحَهُ وَنَصْرَهُ وَنُوْرَهُ وَبَرَكَتَهُ وَهُدَاهُ وَأَعُوْذُ بِكَ

مِنْ شَرِّ مَا فِيْهِ وَشَرِّ مَا بَعْدَهُ،

என்றும், மாலை நேரத்தை அடைந்தால் -

أَمْسَيْنَا وَأَمْسَى الْمُلْكُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ اَللّٰهُمَّ إِنِّي أَسْأَلُكَ

خَيْرَ هٰذِهِ اللَّيْلَةِ فَتْحَهَا وَنَصْرَهَا وَنُوْرَهَا وَبَرَكَتَهَا وَهُدَاهَا

وَأَعُوْذُ بِكَ مِنْ شَرِّ مَا فِيْهَا وَشَرِّ مَا بَعْدَهَا

என்றும் கூறிக்கொள்ளட்டும்" எனக் கூறினார்கள்.

25. மேலும் திருவுளமானார்கள்: ''யார் காலையில்

اَللّٰهُمَّ إِنِّي أَصْبَحْتُ أُشْهِدُكَ وَأُشْهِدُ حَمَلَةَ عَرْشِكَ وَمَلَائِكَتَكَ

وَجَمِيْعَ خَلْقِكَ أَنَّكَ أَنْتَ اللّٰهُ لَا إِلٰهَ إِلَّا أَنْتَ وَأَنَّ مُحَمَّدًا

عَبْدُكَ وَرَسُوْلُكَ. (4 முறை)

இன்னும் மாலையில்

اَللّٰهُمَّ إِنِّي أَمْسَيْتُ أُشْهِدُكَ وَأُشْهِدُ حَمَلَةَ عَرْشِكَ وَمَلَائِكَتِكَ وَجَمِيعَ خَلْقِكَ أَنَّكَ أَنْتَ اللهُ لاَ إِلٰهَ إِلاَّ أَنْتَ وَأَنَّ مُحَمَّدًا عَبْدُكَ وَرَسُولُكَ.. (4முறை)

என்றும் சொன்னால் அள்ளாஹ் அவரின் காற்பகுதியை நரகை விட்டும் விடுதலை செய்து விடுவான். யார் இருமுறை சொல்வாரோ அவரது அரைவாசியை நரகைவிட்டும் விடுதலை செய்வான். யார் மூன்று முறை சொல்வாரோ அவரது முக்கால் பகுதியை நரகைவிட்டும் விடுதலை செய்வான். யார் நான்கு முறை சொல்வாரோ அவரை (முற்றாக) நரகைவிட்டும் விடுதலை செய்வான்."

26. இப்னு அப்பாஸ் ﷺ கூறுகிறார்கள்: கண்மணி நபி முஹம்மது ரஸூலுள்ளாஹி ﷺ அவர்கள் திருவுளமானார்கள்; ''யார் காலையில் (3 முறை)

اَللّٰهُمَّ اِنِّي اَصْبَحْتُ مِنْكَ فِي نِعْمَةٍ وَعَافِيَةٍ وَسِتْرٍ فَاَتِمَّ نِعْمَتَكَ عَلَيَّ وَعَافِيَتَكَ وَسِتْرَكَ فِى الدُّنْيَا وَالْآخِرَةِ என்றும் -

மாலையில் (3 முறை)

اَللّٰهُمَّ اِنِّي اَمْسَيْتُ مِنْكَ فِي نِعْمَةٍ وَعَافِيَةٍ وَسِتْرٍ فَاَتِمَّ نِعْمَتَكَ عَلَيَّ وَعَافِيَتَكَ وَسِتْرَكَ فِى الدُّنْيَا وَالْآخِرَةِ

என்றும் ஓதுவாராயின் அவர்மீது (தமது அருட்கொடைகளைப்) பூர்த்தியாக்கி வைப்பது அள்ளாஹுவின்மீது கடமையாகும்."

27. அனஸ் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: கண்மணி நபி முஹம்மது ரஸூலுள்ளாஹி ﷺ அவர்கள் காலையிலும், மாலையிலும்

இவ்வாறு துஆச் செய்வார்கள்.

اَللّٰهُمَّ إِنِّي أَسْأَلُكَ مِنْ فَجْأَةِ الْخَيْرِ وَأَعُوْذُ بِكَ مِنْ فَجْأَةِ الشَّرِّ

28. இப்னு உமர் ؓ கூறுகிறார்கள்: கண்மணி நபி முஹம்மது ரஸூலுல்ளாஹி ﷺ அவர்கள் பின்வரும் துஆக்களைக் காலையிலும், மாலையிலும் கேட்காது விட்டதில்லை.

اَللّٰهُمَّ إِنِّي أَسْأَلُكَ الْعَافِيَةَ فِي الدُّنْيَا وَالْآخِرَةِ اَللّٰهُمَّ إِنِّي أَسْأَلُكَ الْعَفْوَ وَالْعَافِيَةَ فِيْ دِيْنِي وَدُنْيَايَ وَأَهْلِيْ وَمَالِيْ ط اَللّٰهُمَّ اسْتُرْ عَوْرَاتِيْ وَآمِنْ رَوْعَاتِيْ ط اَللّٰهُمَّ احْفَظْنِيْ مِنْ بَيْنِ يَدَيَّ وَمِنْ خَلْفِيْ وَعَنْ يَمِيْنِيْ وَعَنْ شِمَالِيْ وَمِنْ فَوْقِيْ وَأَعُوْذُ بِعَظَمَتِكَ أَنْ أُغْتَالَ مِنْ تَحْتِيْ ط

29. ஹதீஸ் شريف (ஷரீபில்) வந்துள்ளது. யாரொருவர் ஒரு நாளைக்குப் பத்து முறை (ஷைத்தானை) شيطان விட்டு பாதுகாப்புத் தேடுகின்றாரோ அள்ளாஹ் ﷻ அவரை (ஷைத்தானை) شيطان விட்டும் பாதுகாப்பதற்காக ஒரு மலக்கை நியமித்து விடுகிறான். (الحصن الحصين)

(10 முறை)

أَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ

30. ابوهريرة (அபூஹுரைரா) ؓ கூறுகிறார்கள்: கண்மணி நபி முஹம்மது ரஸூலுள்ளாஹி ﷺ அவர்களிடம் ஒரு மனிதர் வந்து ''அள்ளாஹுவுடைய ரஸூலே! நேற்றிரவு ஒரு தேள் என்னைக் கொட்டிவிட்டது என்றார். அதற்கு ''நீர் காலையானதும் (3முறை)

اَعُوْذُ بِكَلِمَاتِ اللهِ التَّامَّاتِ مِنْ شَرِّ مَاخَلَقَ

என்று ஓதி வந்தால் 'அது உமக்கு தீங்கிழைக்காது" என்றும் மற்றொரு ரிவாயத்தில் ''இவ்வாறு 3 முறை சொன்னால் உமக்கு எந்த வஸ்த்தும் தீங்கிழைக்காது" என்றும் திருவுளமானதாக வந்துள்ளது.

31. ابو سعيد الخدري (அபூ ஸயீத் அல் குத்ரீ) ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: ஒருநாள் கண்மணி நபி முஹம்மது ரஸூலுள்ளாஹி ﷺ அவர்கள் பள்ளிவாசலில் நுழைந்தார்கள். திடீரென அங்கே அன்ஸாரிகளில் ஒரு மனிதர் காணப்பட்டார். அவருக்கு அபூ உமாமா என்று சொல்வார்கள். அவரைப் பார்த்து கண்மணி நபி முஹம்மது ரஸூலுள்ளாஹி ﷺ அவர்கள் ''அபூ உமாவே! தொழுகை நேரமல்லாத நேரத்தில் உம்மைப் பள்ளிவாசலில் பார்த்திருக்கிறேனே; என்ன விசயம்? என வினவினார்கள். 'அள்ளாஹ்வுடைய ரஸூலே! கவலைகள் பற்றிக் கொண்டன. கடன்கள் அதிகரித்து விட்டன' என்றார்கள். அதற்கு கண்மணி நபி முஹம்மது ரஸூலுள்ளாஹி ﷺ அவர்கள் 'உமக்கு ஒரு பேச்சை நான் கற்றுத்தர வேண்டாமா? அதை நீர் கூறிக் கொண்டால் உமது கவலைகளை அள்ளாஹ் போக்கிவைப்பான். உமது கடனையும் தீர்த்து வைப்பான். (அபூ உமாமா கூறினார்கள்:) நான் சொன்னேன். 'ஏனில்லை. (அவசியம்) அறியத்தாருங்கள்'. அதற்கு கண்மணி நபி முஹம்மது ரஸூலுள்ளாஹி ﷺ அவர்கள் திருவுளமானார்கள்: 'காலையானதும், மாலையானதும் மூன்று முறை

اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنَ الْهَمِّ وَالْحَزَنِ ط وَ أَعُوْذُ بِكَ مِنَ الْعَجْزِ وَالْكَسَلِ ط وَ أَعُوْذُ بِكَ مِنَ الْجُبْنِ وَالْبُخْلِ وَ أَعُوْذُ بِكَ مِنْ غَلَبَةِ الدَّيْنِ وَقَهْرِ الرِّجَالِ

என்று சொல்லிக் கொள்வீராக!"

32. ثوبان (ஸவ்பான்) ﷺ கூறுகிறார்கள். கண்மணி நபி முஹம்மது ரஸூலுள்ளாஹி ﷺ அவர்கள் திருவுளமானார்கள்: ''ஒரு முஸ்லிமான அடியார் காலையானதும், மாலையானதும் மூன்று முறை

رَضِيتُ بِاللّٰهِ رَبًّا وَبِالإِسْلَامِ دِيْنًا وَبِمُحَمَّدٍ ﷺ نَبِيًّا وَرَسُوْلًا

என்று சொன்னால் கியாமத்து நாளில் அவனைச் சந்தோசப்படுத்தி வைப்பது அள்ளாஹ்மீது கடமையாகும்." (அன்பான நாயன் தானே தன்மீது கடமையாக்கிக் கொண்டுள்ளான்) என்றும் ........ முன்திர் ﷺ அவர்களுடைய ரிவாயத்தில் கண்மணி நபி முஹம்மது ரஸூலுள்ளாஹி ﷺ அவர்கள் திருவுளமானார்கள்: ''யார் இந்தத் துஆவை காலையில் ஓதுவாரோ அவரின் கையைப் பிடித்து அவரைச் சொர்க்கத்தில் நுழையச் செய்ய நிச்சயமாக நான் பொறுப்பாளியாவேன்." மற்றும் சில ரிவாயத்தில் نبيا என்பதற்குப் பதிலாக رسولا என்றும் வந்திருப்பதால் نبيا ورسولا என்று சேர்த்து ஓதுவது முஸ்தஹப் என்றும் இமாம் நபவி رحمه الله அவர்கள் الاذكار ல் எழுதியுள்ளார்கள்.

33. ابوالدرداء (அபூ தர்தா) ﷺ அவர்களிடம் ஒருவர் வந்து ''அபூதர்தாவே! வீடு எரிந்து விட்டது என்றார். அதற்கவர் 'எரியவில்லை. நான் கண்மணி நபி முஹம்மது ரஸூலுள்ளாஹி ﷺ அவர்களிடமிருந்து கேட்ட புனித வார்த்தைகளை மொழிந்திருப்பதன் காரணமாக அள்ளாஹ் ஒருபோதும் அப்படிச் செய்திருக்க மாட்டான். யார் அவற்றை பகலின் ஆரம்பத்தில் சொல்லிக் கொள்வாரோ மாலைவரை எவ்வித கஷ்டமும், துன்பமும் ஏற்படாது. யார் அவற்றை இரவின் கடைசிப் பகுதியில் சொல்லிக் கொள்வாரோ (மறுநாள்) காலையாகும்வரை அவருக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாது.

اَللّٰهُمَّ أَنْتَ رَبِّيْ لَا إِلٰهَ إِلَّا أَنْتَ عَلَيْكَ تَوَكَّلْتُ وَأَنْتَ رَبُّ

الْعَرْشِ الْعَظِيْمِ ط مَاشَاءَ اللّٰهُ كَانَ وَمَالَمْ يَشَأْ لَمْ يَكُنْ ط لَاحَوْلَ

وَلَاقُوَّةَ الَّا بِاللهِ الْعَلِيِّ الْعَظِيْمِ ط اَعْلَمُ اَنَّ اللهَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ط وَاَنَّ اللهَ قَدْ اَحَاطَ بِكُلِّ شَيْءٍ عِلْمًا ط اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُ بِكَ مِنْ شَرِّ نَفْسِيْ وَمِنْ شَرِّ كُلِّ دَابَّةٍ اَنْتَ آخِذٌ بِنَاصِيَتِهَا اِنَّ رَبِّيْ عَلٰى صِرَاطٍ مُّسْتَقِيْمٍ ط

இன்னொரு ரிவாயத்தில் ஒரு ஸஹாபியிடம் ஒரு மனிதர் வந்து ''உங்கள் வீடு எரிகிறது. காப்பாற்றுங்கள்" என்று கூறிக்கொண்டே இருந்ததாகவும் அதற்கவர், ''எரியவில்லை. ஏனெனில் நான் கண்மணி நபி முஹம்மது ரஸூலுள்ளாஹி ﷺ அவர்கள் கூறக்கேட்டிருக்கின்றேன். யார் காலையானதும் பின்வரும் வார்த்தைகளைச் சொல்லிக் கொள்வாரோ அவரது உயிர், அவரது குடும்பத்தினர், சொத்து, சுகம் எதிலும் அவர் விரும்பாத எவ்வித ஆபத்தும் ஏற்படாது. இன்று நான் அவற்றைச் சொல்லியிருக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே இருந்தார்கள். பிறகு அவர்கள் என்னுடன் எழுந்து 'வாருங்கள் எனக்கூறி எழுந்து நின்றார்கள். மக்களும் அவர்களுடன் எழுந்தார்கள். (எல்லோரும்) அவர்களது வீட்டைச் சென்றடைந்தனர். வீட்டின் அக்கம்பக்கத்தில் இருந்தவை எரிந்தன. ஆனால், அவர்களின் வீட்டுக்கு எந்த ஆபத்தும் ஏற்பட்டிருக்கவில்லை என்று வந்துள்ளது.

وَصَلِّ اللّٰهُمَّ وَسَلِّمْ عَلٰى نَبِيِّكَ الْكَرِيْمِ وَعَلٰى آلِهِ وَصَحْبِهِ اَجْمَعِيْنَ سُبْحَانَ رَبِّكَ رَبِّ الْعِزَّةِ عَمَّا يَصِفُوْنَ وَسَلَامٌ عَلَى الْمُرْسَلِيْنَ وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ.

தொகுப்பு:
خادم مدرسة الرشاد العربية
العبد الفقير الى مولاه الجليل
اسماعيل بن محي الدين
غفى الله عنهما

கிடைக்குமிடங்கள்

**ஸஃது இஸ்லாமிய அறபுக் கலாபீடம்**
மர்கஸ், மாவடிப்பள்ளி,
காரைதீவு (EP), ஸ்ரீலங்கா
**தொலைபேசி: 067 2260519**

**அல் ஹிக்மா இஸ்லாமிக் புக் சென்டர்**
சிற்றி பிளாஸா ஷொப்பிங் கொம்பிளக்ஸ்
73/9, கொழும்பு வீதி, கண்டி
**தொலைபேசி: 081 4472092 & 071 4860781**

Printed by
An-Noor Offset
Aliyar Road, Kalmunai
0776167535